செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. | வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. | பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஹூ (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அடு] யாழ்ப்பாணம்:- சாதாரண ஹூ பங்குனி மீ கக உ வெள்ளிக்கிழமை (2-4-1971) [இல- க

# கந்தபுராணபடனப் பூர்த்திவிழா

## கந்தபுராணத் திருமுறை ஊர்வலத்துடன் நிகழும்

சைவ பரிபாலன சபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்ந்து வருகின்ற கந்தபுராண படனப் பூர்த்திப் படிப்பு 9-4-71 வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத்திலன்று நடைபெறும். பூர்த்திப் படிப்புக்கு முன் கந்தபுராணத் திருமுறை ஊர்வலமும் ஒழுங்குசெய்யப்பெறும்.

உ
திருச்சிற்றம்பலம்

வேந்தாகி விண்ணவர்க்கும்
மண்ணவர்க்கும்
நெறி காட்டும்
விகிர்தனுகிப்
பூந்தாம நறுங்கொன்றை
சடைக்கணிந்த
புண்ணியனுர்
நண்ணுங் கோயில்
காந்தாரம்இசையமைத்துக்
காரிகையார் பண்பாடக்
கவினுர் வீதித்
தேந்தாம்என் றரங்கேறிச்
சேயிழையார்நடமாடும்
திருவையாறே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தசுவாமிகள்.

## அர்ச்சகர் நியமனம்

### சிவாச்சாரியர்களே ஆலயங்களில் பூசை புரிதற்கருகதையுள்ளவர்கள்

[ஆலயங்களில் அர்ச்சகரை நியமிப்பதுபற்றி அண்மையில் தமிழக அரசு செய்திருக்கும் தீர்மானம் சம்பந்தமாகச் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் "சித்தாந்தம்" பத்திரிகையின் பங்குனி மாத இதழில் பத்திராசிரியர் திரு மு. அருணுசலம் (எம். ஏ.) அவர்கள் எழுதிய தலையங்கக் கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி இங்கு வெளியிடுகின்ருேம்.]

ஆசிரியர் "இந்துசாதனம்"

ஆலயங்களில் யாரையும் அர்ச்சகராக நியமிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஒரு திட்டத்தை மேற்கொள்வதாக அறிவித்திருக்கிறது. பனகல் மந்திரி சபையில் இந்துமத ஆலயங்களை அரசாங்க மேற்பார்வையில் எடுத்துக் கொண்டபோது, நடைமுறை வழிபாட்டிலும், சமயத்தத்துவங்களிலும் தலையிடுவதில்லை என்ற உறுதி கொடுத்தே நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது. இப்போது அர்ச்சகர் விஷயத்தில் அரசாங்கம் தலையிடுவது, மன்னர் மானியத்தில் மத்திய அரசு நடந்துகொண்டதுபோல, தங்கள் வாக்குறுதியைக் கைவிடுவதாகும்.

கோவில் வழிபடுவோர்க்காக ஏற்பட்டது; அதற்கு நீண்ட நாளாகத் தொண்டு புரிந்தோரின் கருத்தை உணர்ந்தே அவற்றை நடத்திவரவேண்டும். கோயிலுக்கு உரியவர்கள், வழிபாடு செய்வோர். தொண்டு செய்வோர் யாரும் குருக்களை அர்ச்சகராக நியமிக்கக் கூடாது. வேறு எவரை வேண்டுமானுலும் நியமித்துக் கொள்ளலாம் என்று கேட்டதில்லை; விரும்பியதில்லை அன்றியும் இப்படி யாரையும் நியமிக்கலாம் என்ற நினைப்பு ஒருவகை பிராமண துவேஷத்தினுல் வந்தது. ஆனுல் சிவாசாரியர்கள் அல்லர். பிராமணர்கள் இவர்கள் பரம்பரையாக திருமேனி மூப்போதும் தீண்டிவந்து பூஜையாலும், ஆகம அறிவினுலும் அத்து

வளர்ச்சி 2-ம் பக்கம்

## காணுத கண்ணென்ன கண்ணே!

### திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம்

க்ஷேத்திரத் திருவெண்பா.

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி—வந்துந்தி
யையாறு வாயாறு பாயாமு னெஞ்சமே
யையாறு வாயா லழை.

— ஐயடிகள் காடவர்கோன் நாயனுர்.

பொ—ரை: குந்திக் குந்தி நடந்து உடல் வளைந்து ஒரு கையில் கோலினை ஊன்றி வருந்தி இருமி, ஏங்கி நுரைகொண்டு மிக்கு வந்து வலிந்து தள்ளி ஐ (கோழை) ஆறுபோலத் தொடர்ந்து வாயின் வழியே பாய்ந்து ஒழுகாத முன்னம் நெஞ்சே! இறைவரது திருவையாற்றினை வாய்திறந்து கூவி அழைப்பாயா?

திருக்கைலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமிக்கும் விநாயகர் முதலிய பரிவாரமூர்த்திகளுக்கும் ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 31-3-71 புதன்கிழமை வேதாகம முறைப்படி சிறப்பாக நடைபெற்றது. பூலோக கைலாயம், பஞ்சநதம், ஜெபேசுரம், காவிரி கோட்டம் சீவன்முத்திபுரம் முதலிய திருநாமங்களைக் கொண்டது இத்தலம். உயிர்களின் நன்மைக்காகச் சிவபெருமான் தானே ஆதிசைவர் வடிவில் தோன்றித் தன்னைத் தானே பூசித்துக்காட்டிய தனிச்சிறப்பு இதனுக்குண்டு. சுந்தரமூர்த்திநாயனுர் சேரமான்பெருமாள் நாயனுருடன் காவிரியின் தென்கரையில் நின்று திருப்பதிகம் பாடி காவிரி வெள்ளம்வழிவிட வணங்கிய அற்புதத்தைக் கொண்டது.

### ஸ்ரீ தியாகராஜ இசை விழா

வட இலங்கைச் சங்கீத சபை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் 29-3-71 இல் ஸ்ரீ தியாகராஜ இசை விழாவை ஆரம்பித்துள்ளனர். தினமும் நிகழ்ச்சிகள் 6-30 மணிக்கு ஆரம்பமாகி 10-30 மணியளவில் பூர்த்தியாகும் வட இலங்கையிலுள்ள புகழ்பெற்ற இசை வித்துவான்கள் இவ்விழாவுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து அதனைச் சிறப்பிக்கின்றனர்.

ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திரத் திருவெண்பாவும் இதற்கொன்றுண்டு. தருமையாதீன திருக்கோயில்கள் இருபத்தேழு

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

### கொழும்பு செட்டியார்தெரு ஸ்ரீ முத்து விநாயகர் கோயில் உற்சவம்

கொழும்பு செட்டியார்தெருவில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்து விநாயகப்பெருமான் ஆலயத்தில் பங்குனித் திங்கள் 23-ஆம் நாள் (6-4-71) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு துவஜாரோகண உற்சவம் ஆரம்பமாகும். தொடர்ந்து பததினங்கள் உற்சவம் நடைபெறும் புது வருடப்பிறப்பன்று காலை 7 மணிக்கு ஸ்ரீ முத்துவிநாயகப்பெருமான் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் செட்டியார் வீதி, செக்கடித்தெரு ஐந்துலாம்படிச் சந்தி வழியாக வந்து மாலை 6 மணியளவில் திருச் சந்நிதியை வந்தடைவார். இத்தினம் அதிகாலை 5 மணிதொடக்கம் 6-25 வரை இலங்கை வானெலி மேற்படி ஆலய நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யும்.

### குளிர்ச்சியபிடேகம்

ஏழாலை-மத்தி தவரைக்கலட்டி வற்ருப்பளை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த குளிர்ச்சி அபிடேகம் பங்குனிமாதம் 29ஆம் திகதி (12-4-71) கடைசித் திங்கட்கிழமை நடைபெறும். இக்குளிர்ச்சி விழாவை முன்னிட்டு முதல்நாளாகிய (11-4-71) ஞாயிற்றுக்கிழமை இரவு அம்பிகைக்கு நிகழவிருக்கும் அபிஷேக ஆராதனைகளுக்கு அன்று பகலே அபிடேக பூசைத் திரவியங்களையுதவி இரவு முழுவதும் நிகழவிருக்கும் அபிஷேக ஆராதனைகளிலும் அடுத்தநாள் நிகழவிருக்கும் குளிர்ச்சி தீக்குளித்தல் அன்னதானம் முதலிய வைபவங்களிலும் கலந்துகொண்டு அம்பாளின் இன்னருளைப் பெற்றுய்யும்படி அடியார்களை வேண்டிக்கொள்கின்ருர்கள். ஷை அம்மன்கோவில் இவ்வாண்டு வருடாந்தத் திருவிழா விரோதிகிருது வருடம் சித்திரை மாதம் 17ஆம் நாள் (30-4-71) வெள்ளிக்கிழமைஆரம்பமாகி 10-5-71 திங்கட்கிழமைதீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

### மருதடி சந்நிதியில் ஓதுவார் மூர்த்திகள் இசைவிருந்தளிப்பர்

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார்கோயிலில் 13-4-71 செவ்வாய்க்கிழமை 16-ஆந் திருவிழாவாகும். அன்று மாலை 6-30 மணி தொடக்கம் காஞ்சிபுரம் மெய்கண்டாராதீன பண்ணிசைப் புலவர் தேவாரமணி திரு. பி. ஏ. எஸ். இராசசேகரன் ஓதுவார் மூர்த்தி அவர்கள் திருமுறை இசைவிருந்து சிறந்த பக்கவாத்தியசகிதம் அளிக்கவுள்ளார்கள்.

### சிவத் தமிழ்ச் செல்வி மலேசியாவுக்குச் செல்லவிருக்கிருர்

மலேசிய மக்களின் அழைப்பின் பேரில் ஆங்கு சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதற்காக "சிவத் தமிழ்ச் செல்வி" பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 6-4-71 மாலை 6-15 மணிக்கு ஈழத்தி லிருந்து பயணமாகின்றர். ஆங்கு இருபத்தேழு தினங்கள்வரை தங்கியிருந்து பலவிடங்களிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.

### நாவலர் நல்வாக்கு

1. ஆரோக்கியம் (அ)

இன்று எவ்வாறு நாம் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமென்பதனைப்பற்றிச்சிந்திப்பாம்.

1. அறம், பொருள், இன்பம் வீடு என்னும் புருஷார்த்தம் நான்கையும் அடைவதற்குக் கருவி சரீரம்.

2. காலையிலே சிலம்பமேனும், குதிரையேற்றமேனும், கால்

வளர்ச்சி 4-ம் பக்கம்

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ஞு பங்குனி மீ ௧௯-௨ வெள்ளிக்கிழமை [1971]

## சைவசமயக் கல்வி

"இன்று சமய தீட்சை பெருதவர்கள் சைவ சமயிகள் அல்லாதோர் சைவ சமயிகளாயபோதிலும் சமய அறிவு அற்றவர்கள் எல்லாக் கல்லூரிகளிலும் சமய பாடம் போதிக்க அனுமதிக்கப்படுவதனுல்தான் இன்று சைவ சமயத்தின் மகிமை குறைந்துள்ளது. நாத்திகம் பெருகுகின்றது. இஸ்லாம் போதிப்பதற்கு மௌலவிகளே அனுமதிக்கப்படுகின்றனர்கள். கிறிஸ்து சமயம் போதிப்பதற்கு கிறிஸ்து சமயத்தில் பாண்டித்தியமுடையவர்களே அனுமதிக்கப்படுகின்றனர்கள். உடற் பயிற்சி போதிப்பதற்குக்கூட உடற் பயிற்சி அநுபவம் பெற்ற ஆசிரியர்களே அனுமதிக்கப்படுகின்றனர்கள். ஆனல் சைவ சமயத்தைப் போதிப்பதற்கு மட்டும் ஆசிரியர் என்ற பெயர் கொண்ட எல்லோரும் அனுமதிக்கப்படுகின்றனர்கள். அவர்கள் பொறுப்பற்ற முறையிற் சமயபாடப் புத்தகத்திலிருக்கும் விடயங்களை வாசித்துக் காட்டிவிட்டு இதில் எனக்கும் நம்பிக்கையில்லை, ஆனல் புத்தகத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது என்கின்றனர்கள் இதனுலேயே இன்று நாத்திகம் பெருகுகின்றது. இவ்வாறு இக்காலச் சைவசமயக் கல்வி நிலையைப் பற்றி, பண்டிதர் வ. முத்துக்குமாரு அவர்கள் மயிலிட்டி தெற்கு கட்டுவன், தறட்டையிட்டி ஞானவைரவர் ஆலயத்தில் (18-3-71 இல்) நிகழ்ந்த ஸ்ரீமத வ. வே. சண்முகநாதக் குருக்களின் ஆசாரியாபிஷேக நிகழ்ச்சியில் உரை நிகழ்த்தினர். பண்டிதரவர்களுடைய கருத்துக்களை சைவசமயிகள் கூர்ந்து கவனித்தல் வேண்டும். பண்டிதரவர்கள் சுட்டிக்காட்டுகின்ற குறைகளைத்திரட்டிஒரு அறிக்கை மூலம் கல்வி மந்திரியவர்களுக்குத் தெரிவித்தல் அவசியம். சைவசமயம் கற்பிப்பதற்குத் தகுதியுடைய ஆசிரியர்களை நியமித்தால்தான் பிள்ளைகள் சைவசமய உண்மைகளை பிழையின்றிக் கற்க ஏதுவாகும்.

சென்னைச் சைவசித்தாந்த சமாஜம் நடத்துகின்ற சைவப்புலவர் பரீட்சைகளிலும, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் நடத்தத் தீர்மானஞ்செய்திருக்கின்ற சைவசித்தாந்த பிரவேச பண்டிதர் பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைகளிலும் சித்திபெற்றவர்களை எதிர்காலத்தில் பாடசாலைகளில் சைவசமயமபோதிக்க நியமனஞ்செய்தல் நன்று. இப்பரீட்சைகளில் கூடியதொகையினர் தோற்றுவதற்குச் சைவபரிபாலன சபையார் ஊர்கடோறும் சைவசித்தாந்த வகுப்புகள் நடத்துவதும் விரும்பத்தக்க செயலாகும், இங்கு குறித்த பரீட்சைகளில் தோற்றுபவர்களைச் ஊக்கப்படுத்த பரீட்சைகளுக்குத் தேவையான புத்தகங்களை தமிழ்நாட்டிலிருந்து தருவித்தல் வேண்டும். அங்கும் கிடையாத நூல்களை சைவபரிபாலன சபையார் பிரசுரஞ்செய்தல் பெருஞ் சைவப் பணியாகும்.

சைவபரிபாலன சபையினது பரீட்சைக் காரியதரிசி சில தினங்களுக்குமுன் இப் பத்திரிகையில் சைவசித்தாந்தப் பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டத்தை வெளியிடுகையில் சைவ சித்தாந்த பரீட்சையிற்றேற்றுகின்றவர்களுக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் வகுப்புக்கள் நடத்த ஒழுங்குசெய்யும் தீர்மானத்தையும் வெளியிட்டனர்.

ஆசிரியர்களையும் பிறரையும் சபையார் நடத்துகின்ற சைவசித்தாந்தப் பரீட்சைகளில் தோற்றும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

## திரு. கிரிதாரிபிரசாத் குருநாகலில் விரிவுரை

குருநாகல் சைவமகாசபை ஆதரவில் சபைமண்டபத்தில் 6-4-71 செவ்வாய்க்கிழமைமாலை டாக்டர் திரு. ஆ. சுப்பிரமணியம் தலைமையில் பகிரத்னம் உயர்திரு. நா. கிரிதாரிபிரசாத் அவர்கள் திருவாசகத்தேன் என்னும் பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

### எங்கள் அறிவித்தல்

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை இந்துசாதனம் தமிழ் ஆங்கிலக் காரியாலயம்இரண்டிலும் 13-4-71 தொடக்கம் 17-4-71 முடிய புது வருஷத்துக்காக விடுதலைநாட்களாகும். 16-4-71-இல் இரு பத்திரிகைகளும் வெளிவரமாட்டா.

21-3-71. —அதிபர்.

## மதிப்பிற்குரிய குரவர்

திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள்
[திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபைத் தாபன அங்கத்தவர்]

( முன் வளர்ச்சி — 2 )

திருக்கேதீச்சர அபிவிருத்திக்கு அவரும் காலஞ்சென்ற காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியாரும் ஆரம்பத்திலிருந்தே திருக்கேதீச்சரப் புனருத்தாரணசபைக்கு ஆக்கமான புத்திமதி கூறி வந்துள்ளனர்.

கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரநாதன் திருவடிகளில் தந்தையார் கொண்டுள்ள பக்தியைப்போல அவருடைய தவப்புத்திரன் சிவஸ்ரீ கு வைத்தீசுவரக்குருக்களும் இடையருத அன்பு பூண்டுள்ளனர். அவ்வன்பின் காரணமாக அவருடைய புத்திரன் கேதீசுவரத் தலத்தின் மகிமையை சைவ உலகம் உணரும் பொருட்டு 'திருக்கேதீசுவர புராணம்' என்னும் பக்திச் சுவையுள்ள நூலினைப் பாடி குன்றுப் புகழையீட்டியுள்ளனர். நூலாசிரியர் துரதிஷ்டமாக 1967 இல் சிவபதமடைந்தனர். குருக்கள்ஐயா அவர்கள் அந்நூலினை சென்ற மூன்று மாதங்களுக்குமுன் அச்சேற்றி சென்ற திருக்கார்த்திகையிலன்று திருக்கேதீசுவரத்தில் பல புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றினர்.

அவருடைய தொண்டுகளிலொன்று நல்லூரில் கைலாசநாத கோவிலில் குருபரம்பரையினருடைய பிள்ளைகளுக்கு குரு வகுப்பை நிறுவி நடத்தினதாகும் திருக்கேதீசுவரத்தில் நடைபெற்று வருகின்ற குருவகுப்புக்கும் வழிகாட்டியாகத் தொண்டாற்றினர். உலக வாழ்வு அனித்தியமானதே. குருக்கள் ஐயா அவர்களும் எங்களை விட்டுப் பிரியவேண்டிய காலம வந்துவிட்டது நாவலர் பெருமான் பிரிவால் அக்கால மக்கள் வருந்தியமைபோல இக்கால மக்கள் குருக்கள் அவர்கள் பிரிவால் வருந்தவேண்டியவிதி ஏற்பட்டுவிட்டது.

திருக்கேதீசுவர புராணத்துக்கு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய அணிந்துரையில் ஒரு பகுதியைக் கீழே தருகின்றேம்.

(வளர்ச்சி 3- ஆம் பக்கம்)

## அர்ச்சகர் நியமனம்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

றையில் நின்று தழும்பேறியவர்கள். அவர்கள் ஆதிசைவர் எனப்படுவர். அவர்களே குருக்கள், சிவாலய பூசையென்பது கூலிக்காகச் செய்கிற ஒரு தொழிலன்று; செய்வோரிடத்திலே வழிபடுவோர்க்கு நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கை திடீரென்று ஒரு நாளில் வருவதன்று

மேலும் சமயப்பற்று இல்லாத ஆட்சி முறையினுலும், சமயமே கூடாது என்று சொல்கின்ற அரசினுலும், சமயம் குன்றிப்போய் இருக்கின்ற இத்தகைய சூழ்நிலையினுலும், முற் கூறியபடி நம்பிக்கையைக் குலைப்பது, பெரும் கேட்டுக்கு வித்தாக முடியும். ஆதி சைவர்களைச் சைவ சமூகம் சில ஆயிரம் ஆண்டுகளாக இத்துறைக்கென்றே தனிப்படுத்தி வைத்திருக்கிறது. வாழ்க்கையில் இன்று எல்லாத் துறைகளிலும், முக்கியமாக ஆட்சித் துறையில், ஒவ்வொன்றும் தனிப்பகுதியாக ஆக்கப்பெற்றுள்ளது. ஒருவர் மற்றொன்றின் அருகே செல்வதில்லை. தாசில்தார் தன் வேலையைச் செய்வாரேயன்றி மற்ற வேலையருகே செல்லமாட்டார். அப்படியே கல்விக் கண்காணிப்பாளர், என்ஜினியர் போன்றோர். இதுபோலவே அர்ச்சனை செய்யும் துறையும், அங்கு படிப்பும், பயிற்சியும் முக்கியமென்றல் கோயிலில் படிப்பும், பரம்பரை ஆசாரமும் முக்கியமாகும். ஒரே சட்டம் எல்லாவற்றிற்கும் பொருந்தாது.

தவிர இன்று அதிகாரத்திலுள்ள ஆட்சிவர்க்கத்தார் கோயிலுக்குப் போகிறவரல்லர். திருவைந்தெழுத்து ஓதிறவர் அல்லர். ஆகவே இவர்களுக்குக் கோயில் சம்பந்தமாக உரிமையில்லை. அதிகாரமிருக்கலாம். உரிமையில்லாத இடத்தில் அதிகாரம் கொண்டு பிரவேசிப்பது பெரும் சமூகத்துரோகம.

அரசு உடனே கவனிக்க வேண்டிய காரியங்கள் எத்தனையோ உள்ளன. பள்ளிப் பிள்ளைகள் எல்லாம் தினம் ஒரு வேலை நிறுத்தம் தினமும் பள்ளிகளும், கலாசாலைகளும் மூடுவதும், திறப்பதும், திறக்காமலே மூடுவதுமாய் இருக்கின்றன. இந்த நிலைமையில் எதிர்காலக் குடிமக்களின் வாழ்க்கை நாளுக்கு நாள் பாழாகிக் கொண்டு வருகிறது. அரசாங்கம் இந்த நிலைமையைப் பரிகரிக்கத் தெரியவில்லை; தைரியமில்லை. ஆகவே இதை நோக்கிப் பொது மக்களின் மனம் வெளிப்படுவதை மாற்றும் பொருட்டு, அர்ச்சகர் நியமனம் போன்ற உருப்படியில்லாத சின்னக் காரியங்களில் மக்கள் மனதைதிருப்பி விட்டுக் கொண்டிருக்கிறது. இது ஏமாற்று வித்தை, இந்த வேலையை அரசு உடனே நிறுத்த வேண்டும்.

கோயில்களிலே தெய்வ நம்பிக்கை அற்றவர்களை அறங்காவலர்களாக நியமிக்கும் ஊழலையும் உடனே தடுத்து நிறுத்த வேண்டும். நிறுத்திப் பெரிய பிரச்சினைகளில் மனம் செலுத்த வேண்டும்.

சிவாசாரியாரல்லாத பிறர் ஆசாரம் வல்லவராகி, ஆகமங் கற்று, நான் பூசைசெய்கிறேன் என்று கேட்கவில்லை; வழிபடுவோரும் கேட்கவில்லை. பின் ஏன் இந்த அவதி ?

கோவில் ஆகம விதிப்படி நடப்பது, அதில் சொல்லியதற்குப் புறம்பாக ஒன்றைப் புகுத்துவது அதனமைப்பிற்கே முரணுதம். பிறர் பூசை செய்வதானுல் தனது இஷ்டம்போல் புதுக்கோயில் கட்டிப் பூசிக்கட்டுமே! யார் தடுக்க முடியும் ?

"எங்கள் சமயத்தில் தலையிட்டால் என்ன நடக்குமோ தெரியாது, ஜாக்கிரதை!" என்று அச்சுறுத்துகிற தோரணையில் முகம்மதியரும் பிறரும் தினமும பத்திரிகையில் எழுதுகிருர்கள். இந்து சமயந்தான் எல்லாத் தவறுகளுக்கும் இடம் கொடுக்க வேண்டும் ?

இந்து மக்களும் சிறப்பாக சைவ, வைணவ மக்களும் இந்த யோசனையை அடியோடு களைந்தெறியும்படி அரசை நிர்ப்பந்திப்பார்களாக. இனிச் சும்மா தூங்கியிருப்பது பொறுக்கும் காரியமன்று.

## காணாதகண்ணென்ன

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

னுள் ஒன்றகத் திகழ்கின்றது. இவ்வரிய ஆலயத்தைக் கண்ணேனக் காத்துவரும் தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளப்படி இத்திருக்கோயிலினது இராசகோபுரம் மற்றுமுள்ள கோபுரங்களும் பழுது பார்த்தும், சுதையமைத்தும், வர்ணம் வைத்தும் சுவாமி அம்பாள் விமானம், திருவோலக்க மண்டபம் முதலாகப் பல விமானங்கள் புதுவண்ணம் தீட்டியும் இன்னும் பல திருப்பணிகள் ஜீரணோத்தாரணத்திற்கு முன் செய்யப்பெற்றன ஸ்ரீ ஐயாறப்பர் திருவடிகளைத் தியானஞ் செய்து அவருடைய திருவருளைப் பெறுவோமாக.

அணிந்துரை அரங்கம்

## விரோதிகிருது வருஷ வாக்கிய பஞ்சாங்கம்

வெளியிடுவோர்: யாழ்ப்பாணம், கோக்குவில், இ. சி. இரகுநாதையர் அவர்கள் சகோதரரின் புத்திரர் இ வெங்கடேச ஐயர்

பெறுமிடம்:- இ. வெங்கடேச ஐயர், சோதிட விலாச புத்தசாலை, நம்: 46, பெரியகடை, யாழ்ப்பாணம். (இலங்கை)

விலை ரூபா: 2-00

வழமைபோல மங்களமான மஞ்சள்நிற அட்டையுடன் 100 பக்கங்களுடன் தெளிவான எழுத்தில் நூல் வெளிவந்திருக்கின்றது. இற்றைக்கு 304 வருடங்களுக்கு முன் இராமலிங்க முனிவரால் இலங்கையில் வாக்கிய பஞ்சாங்கம் வெளியிடப்பெற்று பின் அவருடைய சந்ததியினரால் கணிக்கப்பட்டு வருகின்றது. பஞ்சாங்க உறுப்புகளுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய பஞ்சாங்க உறுப்புக்கள் ஒவ்வொரு மாதத்துக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சுபமுகூர்த்தங்கள், விடுமுறை நாட்கள் முதலிய விடயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 11673

கோண்டாவில், பரமிருபசிங்கம் கைம்பெண் சரஸ்வதி —வழக்காளி

கோண்டாவில், கணபதி வேலுப்பிள்ளை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11673 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ஆ சித்திரை மீ 30 உ (30-4-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 1568/-ம் 8-5-70 தொடக்கம் 3-10-70 வரைக்கும் ரூபாய் 800/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 275-25

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக நல்லூர் கோவிற்பற்று கோண்டாவிலிறை "மணியன் தோட்டம்" என்னும் மூன்று துண்டுக் காணிகள் பர கில. இலா. 0-6-77 குளி 3-33 குளி 3-33 குளி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 13317-ம் இலக்க பிரிவிடுதல் வழக்கில் அணைக்கப்பட்டுள்ள உலாந்தா படத்தில் 3, 4, 5ம் துண்டுகளாக காட்டப்பட்டுள்ளவை. எல்லாம் கூடி 13-43 குளி இதற்கெல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் சின்னுச்சிக்கும் பங்காளருக்குமுரிய வாதனம், வடக்கு எதிராளியினுதனம், மேற்கு கையொழுங்கை, தெற்கு ஷை படத்தில் 6ம் துண்டாக காட்டியிருக்கும் துண்டுக்காணி இதடங்களும் பதிவிலக்கம் முறையே D. 282/66, D. 282/63, D. 282/109

செ. விசாகரெத்தினம்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்,
133 பருத்தித்துறை ரோட்டு.
நல்லூர் யாழ்ப்பாணம் 21-3-71
எம். 574 2 4 71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு. இல: M B 11064

1. கந்தையா சோமசுந்தரமும் பெண் 2. திலகவதி அம்மாவும் —காரைதீவுகிழக்கு, காரைநகர். — வழக்காளி

எதிராக

1. வயித்திலிங்கம் சுப்பிரமணியம் தோப்புக்காடு - காரைதீவுகிழக்கு காரைநகர் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 11064-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1971-ம் ஞு சித்திரை மீ 28-ஆம் உ புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1650-ம் 23-8-69 தொடக்கம் 5-12-69 வரைக்கும் ரூபா 1000 -க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 264-97-ம் இதில் ரூபா 850/- நீக்கி.

### ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவு கோவிற்பற்று களபூமிஇறை 'மலவருவன்கலட்டி' தி பர 22-ம் 11 குளியும் இதில் தெற்குப் பக்கமாய் தி பர 13-ம் 11 குளியும் வான்பயிர்செய்பயிர்களுடன் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை வீரசாமிக்கும் பங்காளிகளுக்குமுரிய ஆதனம். வடக்கு எதிராளிக்குரிய இதன் மிகுதிக் காணி. மேற்கு ஒழுங்கை, தெற்கு கடற்கரை.

2 ஷை இறை "மலவருவன் கலட்டி" தி. பர 12-ம் 12 குளியும் எல்லைகள் கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு நாகப்பர் இராமசாமியின் ஆதனம். தெற்கு நாகப்பர் கைம்பெண் தங்கம்மாவின் ஆதனம், பதிவு இலக்கம் C 225/62.

I. A. எட்வேட்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை, 27-3-71.
எம். 578 2-4-71.

## மதிப்பிற்குரிய குரவர் . . . .

(2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

"பாடல்களில் ஆங்காங்கே கச்சியப்ப சிவசாரிய சுவாமிகளின் அடிச்சுவடுகளையும். சேக்கிழார் நாயனரின் அடிச்சுவடுகளையுங் காணுந்தோறுங் களிப்பு மிக்கது. புராண கடை, பொங்கித்ததும் பித்தங்கு தடையற்றதோரருவி போலொழுகியது இடையிடையே வருஞ் சிவார்ச்சனைக்கிரமம் நெஞ்சை உருக்கியது. பாலாவி என்ற திவ்ய தீர்த்த மகிமை உற்சவ விசேஷம் திருநந்தவன வருணனை என்றின்னோரன்னவை புராணத்தின் மணியாரங்களாய் மிளிர்ந்தன.

கடவுள் வாழ்த்துக்களும் இலங்கைச் சிறப்பில் வருந்தல விசேடங்களும் ஒருங்கு சேர்ந்து திருக்கேதீசுவரத் திருவாயிற் கோபுரம்போன்று புராணத்து நுழைவாய்தலை அழகு செய்கின்றன.

இத்துணைச்சிறப்புவாய்ந்த இப்புராணத்தை சிவாகம உணர்ச்சியும் புராணங்களில் அளவிறந்த பயிற்சியும், இலக்கண இலக்கிய முதிர்ச்சியும் சைவசித்தாந்த அறிவும் திருமுறைகளிலே மிக்கபயில்வும் ஒருங்கமைந்து, கவிதா சாமர்த்தியமும் படைத்துத் தெய்வபக்தி கனிந்த ஒருவராலேதான் இயற்ற முடியும்.

சிவாகம பானுவாய் அருமந்த சைவநூலுரைகள் பலவற்றை உபகரித்த அச்சுவேலி, சிவஸ்ரீ ச குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் அருந்தவப்புதல்வராகிய சிவஸ்ரீ வைத்தீசுவரக் குருக்கள் அவர்களே திருக்கேதீச்சர புராணத்தை இயற்றியவர்கள்.

குருக்களவர்கள் தமது அருமைத் தந்தையார் அவர்கள் உபகரிக்கும் நூலுரைகளை உருப்படுத்துவதில் அரும்பெருஞ் சேவைகள் செய்தும் விநாயகராலய பூசைகள், உற்சவங்கள், புராணபடனங்கள் நடத்திக் கொண்டும் தமது பேரறிவையும் கவிதாசாமர்த்தியத்தையும வெளிக் காட்டாது குடத்துள் விளக்குப்போல் அடக்கமாயிருந்திருக்கின்றார்கள்.

சைவ மக்கள் வடமொழி, தமிழ்மொழியைக் கற்று, பஞ்சமா பாதகங்களைவிலக்கி, சிவதீட்சைபெற்று ஆலய சேவை புரிந்து அடியார்கள் பக்தியுடன் வாழவேண்டுமென நாவலர் பெருமான் விரும்பினர். குருக்கள் ஐயாவினுடைய குறிக்கோளுமிதுவே.

குருக்கள் ஐயாவினுடைய வாழ்க்கை வரலாற்றைச் சைவ மக்கள் யாவரும் அறிதல் வேண்டும். அது ஈழநாட்டிலுள்ளவர்களுக்கு மாத்திரமல்ல, பாரத நாட்டிலுள்ளவர்களுக்கும் பயன்படும். குருக்கள் ஐயா மறைந்த போதிலும் அவருடைய வாழ்க்கையின் மாண்பும், கருத்துக்களும் பிற் சந்ததியினருக்கு ஒரு கலங்கரை விளக்காக பயன் தரும்.

அவ்வரலாற்றில் அவருடைய பேரனர் சிவஸ்ரீ வை. கனகசபாபதிக் குருக்கள் பேரும் சேர்க்கப்படுதல் வேண்டும். இறைவனருளால் அவர் தமது பேரனரதும் தந்தையாரதும் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சிறந்த சிவாச்சாரியராக விளங்குவாராக.

## Commission Sale
## யாழ்ப்பாணம் றிக்குவெஸ்ற் கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: 6127/A

வினாசித்தம்பி சின்னத்தம்பி, கோப்பாய் வடக்கு யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

பூதன் செல்லன் கோப்பாய் வடக்கு, யாழ்ப்பாணம். —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனத்தை 1971-ம் ஞு சித்திரை மீ 30-ம திகதி (30-4-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 273-00ம், 20-12-68 தொடக்கம் 5-6-70 வரைக்கும் ரூபாய் 150/-க்கு 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 34-50

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் வடக்கு இறை "வரப்பத்தை" பர. கில இலா. 12 செய்பயிர் வான்பயிர்களும், வீடுகளும் இதற்கெல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு சுக்கிரவார மடதர்ம ஆதனம, மேற்கு ஒழுங்கை. தெற்கு கந்தசாமி பெண் திலகவதியின் ஆதனம். வடக்கு புறமாக உள்ள வீட்டில் முழு உரித்தும், இதில் பிரிவிடப்படாத ¼ பங்கில் பர. கில இலா. ஒன்று மறு வீடுகளும் பிற நீக்கலாக.

167/1, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு.
யாழ்ப்பாணம். 28-3-71

ப. நா. தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
எம் 575 2-4-71

### பிழை திருத்தம்

19-3-71 இந்துசாதனத்தில் வெளிவந்த M B 11083ம்இலக்க கோட்டு விற்பனவு விளம்பரத்தில் தீர்வைத்தொகையில் ரூபாய் 8008/- என்பதை 8000/- என்றும், ஆதன விபரத்தில் காணிப் பேர் "நீலபாலன் கலட்டி"என்றும் திருத்தி வாசிக்குக.

## பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயா அவர்களுக்கு உதவுங்கள்

பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்களுக்கு பின் வரும் அன்பர்கள் பணஉதவியுள்ளனரென்பதைப் பண்டித மணியவர்கள் எமக்குத் தெரிவிக்கின்றனர்.

| | | ரூபா. சதம். |
|---|---|---|
| 26-3-71 வரை சேர்ந்தது | | 191-00 |
| பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை | வேலணை | 10-00 |
| | மொத்தம், | 201-00 |

2-4-71 — பத்திராதிபர்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1 மதியாபரணம் முத்துலிங்கம்
2 பெண் மகேஸ்வரி இருவரும், நீர்வேலி. —வழக்காளி

வழ. இல: M B 9452 எதிராக

1 வினாயர் பொன்னுத்துரை
2 பெண் இரத்தினம் இருவரும், நீர்வேலி வடக்கு, நீர்வேலி. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9452-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971 ம ஆ எப்பிரல்(சித்திரை)மீ 28-ம் திகதி [28-4-71] புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2760/-ம், 28-9-67 தொடக்கம் 11-6-68 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 8% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 301-05 இதில் ரூபாய் 800/- கொடுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பிரிவு கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை 'மங்களவத்தையும் மங்களவத்தை தோட்டமும்' பர. கில. இலா. 4-0 வீடு, கிணறு செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கு எல்லை கிழக்கு கார்த்திகேசு பெண் பொன்னம்மாவினுதனம். வடக்கு ஐயாத்துரை சின்னத்தங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு ஒழுங்கை முகப்பும் மிகுதிக் காணியும் தெற்கு கந்தையா பெண் செல்லமுத்துவினுதனம், இதடங்கலும் இக்காணிக்கு மேற்கிலிருக்கும் காணியின் வடக்கெல்லை ஓரமாக மேற்கொழுங்கையிலிருந்து ஆறுமுள அகல ஒழுங்கை பாவிப்புரித்தும் மேற்கெல்லைக் காணிக்குரிய மேற்படி கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலுருத்தும் புற நீங்கலாக, பதிவு இலக்கம் K. 239/72

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்,
19—3—71

அ. போ. எதிர்மனசிங்கி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 571 2—4—71

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோர்ட்டில் வழ: இலக்கம் 9896

கெருடாவில் மயில்வாகன ஐயர் கைம்பெண் தங்கம்மா —வழக்காளி

எதிராக

கெருடாவில் சுப்பையா குழந்தைவேலு —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனத்தை 1971-ஆம் ஆண்டு வைகாசி மீ 16-ஆந் திகதி (16-5-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று கெருடாவிற் குறிச்சியிறை அரசடியிற் கலட்டி கி. பர. 9 ஷை தச்சம்பலைக் கலட்டி கி. பர. 12½ இதில் பிரிவிடல் 1/6 பங்குக்கு கி பர. 3 குளி 10½ எல்லை கிழக்கு அம்மினிப்பிள்ளை தம்பிஐயாவுக்குடையவாதனம் வடக்கு உலககுருநாதக் குருக்கள் முத்துச்சாமிக் குருக்களின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடையவாதனம்; மேற்கு கனகசபை பெண் அருமைமுத்துவுக்குடையவாதனம். தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னைகள், வேம்புகள். கிணறு வீடு அடுக்களை முழுவதும்.

துரட்சித்தொகை:

| | | |
|---|---|---|
| | | 6968-75 |
| ரூபா 5000/-க்கு 5-1-68 தொடக்கம் 30-10-68 வரை 10 வீத வட்டி | | 409-71 |
| ரூபா 7378-46க்கு 30-10-68 தொடக்கம் 4-3-69 வரை 5 வீத வட்டி | | 122-97 |
| | | 7501-43 |
| 4-3-69 இல் பற்றிய தொகை | ரூபா | 1500-00 |
| | மிகுதி | 6001-43 |
| ரூபா 6001-43க்கு 4-3-69 தொடக்கம் 22-7-70 வரை 5 வீத வட்டி | | 301-05 |
| | | 6301-48 |
| 20-2-1970 இல் பற்றிய தொகை | | 3500-00 |
| | மிகுதி ரூபா | 2801-48 |
| ரூபா 2801-48க்கு 22-2-70 தொடக்கம் 20-2-71 வரை 5 வீத வட்டி | ரூபா | 140-07 |
| | மிகுதி வருமதி ரூபா | 2941-55 |
| ரூபா 2941-55க்கு 20-2 71 தொடக்கம் இறுபடும் வரையும் 5 வீத வட்டியும் | | |
| | மிகுதிச் செலவு ரூபா | 117-73 |

"உமாபதி"
கெல்லண்டை ரோட்டு,
பருத்தித்துறை, 24-3-71

R. S. இராமநாதன்
கொம்மிசனரும் விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்
எம். 570 2-4-71

ஆனைக்கோட்டை
# மூத்தவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராண படனப் பூர்த்திப் படிப்பு

"கந்தபுராணம் என்றால் தவம்; தவத்தினால் தீமையையும் செய்யலாம்; நன்மையையும் செய்யலாம்; தீமை செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள், நன்மை செய்தவர் உயர்த்தப்படுவார்; அவரை சமூகம் போற்றும்; இந்த ஆறு மாச காலமும் தொடர்ச்சியாக – பக்தி பரவசமாக இந்த ஆலயத்தில் கந்தபுராண விரிவுரையை நடாத்தி வந்துள்ளனர். இவ் விரிவுரையைக் கேட்டதில் வந்த முடிபு இதுவேயாகும். "நான் ஒரு ஆசிரியராக இருந்தும் இளைப்பாறிய பின்புதான் இத்தகைய ஒரு புராண விரிவுரையைக் கேட்கச் சந்தர்ப்பம் கிடைத்தது - இதையிட்டு மகிழ்வடைகிறேன். நாங்கள் உண்மைத் தவம் செய்துள்ளோம்"

ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலில் கந்தபுராண விரிவுரையை கடந்த ஆறு மாச காலமாகத் தொடர்ந்து நடாத்தி வந்த 'சித்தாந்தச் செல்வர்' திரு. வை. கல்லையாவின் அரிய சமயப்பணியைப் பாராட்டிப் பேசும்போது திரு. ஞானசம்பந்தன் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

இப்பூர்த்திவிழா 28-3-71 ஞாயிறு மாலை சிறப்புற நிகழ்ந்தது விசேடபூசைவழிபாடுகளை டுத்து இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் திரு. வே. துரையப்பா அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நிகழ்ந்தது.

திரு. கனகசபை அவர்களும், திரு. க. சண்முகநாதன் அவர்களும் திரு. நல்லையாவுக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். திரு. சம்பந்தர் பொற்கிழி வழங்கினார்கள். கந்தபுராண விரிவுரைப் பூர்த்தி விழாவுக்கு தலைமைவகித்த திரு. வே. துரையப்பா அவர்கள் புராணங்களுக்கு உரை கூறுவதில் திரு. நல்லையா தலைசிறந்து விளங்குகிறார்; நாட்டின் பலபாகங்களிலும் அவர் இத்தகைய தொடர் விரிவுரைகளை நடத்தி அரும் பணியாற்றி வருகிறார். அவரது சேவை மென்மேலும் வளர்வதாக என்றார்.

தொடர்ச்சியாக கந்தபுராண விரிவுரையைக் கேட்டுவந்த அன்பர்கள் தம் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

(நமது நிருபர்)

## நாவலர் நல்வாக்கு

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

நடையேனுஞ் செய்ய வேண்டும்.

3. நாடோறும் காலை மாலை என்னும் இரண்டு நேரத்தினும் தவறாமல் மலசல மோசனஞ் செய்யும்படி பழகிக்கொள்ளல் வேண்டும்.


4. துவர் உள்ள தூள் இலை கோம்பு என்பவைகளினாலே பல்லின் உள்ளையும் புறத்தையும் செவ்வையாக விளக்கல் வேண்டும்.

5. நாடோறும் சரீரத்தைத் தேய்த்து ஸ்நானம் பண்ணிக்கொண்டு வரல் வேண்டும்.

6 உடுக்கிற வஸ்திரங்களும் சயனிக்கிற படுக்கைகளும் சிறு அழுக்கில்லாமற் சுத்தமாயிருத்தல் வேண்டும்.

[உதவியவர்: திரு. ம சி. சிதம்பரப்பிள்ளை ]

## அர்ச்சகர் நியமனமாம்!



பக்தர் "ஆலயங்களில் அர்ச்சகர்களை நியமிக்கிறவிடயத்திலை தமிழக அரசு அண்மையில் செய்திருக்கிற ஒரு தீர்மானம்பற்றி சைவ மக்கள் பெருங் கவலையடைந்துள்ளனராம்! அரசுக்கு இதுபற்றி அறிவுரை கூறும் பணியில் அங்கேயுள்ளவர்கள் ஈடுபட்டு உழைக்கிறார்கள்!

சித்தர்: அப்ப, முன்பின் ஆலோசனை பண்ணாமல் தீர்மானஞ் செய்திட்டினையெண்டு சொல்லுங்கோவன்; அப்படி ஏன் செய்தார்களோ? மக்கள் தூங்குகிறார்களா விழிப்பாக மதநம்பிக்கையுடன் இருக்கிறார்களா? என்று அறிவதற்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு. 'அழுதபிள்ளை பால் குடிக்கும்' என்பதை நினைக்கும்போது இவர்களின் முயற்சியும் அவமாகாது!

"நாயன்மார் – நாதன்"

## ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

கல்லை. ஞானசம்பந்தர் ஆதின கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் வல்லுவெட்டித்துறை சிவன்கோவிலில் நிகழும் திருவிழாவில் கந்தபுராண விரிவுரை நிகழ்த்திவருகிறார்கள்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல: M B 6798

1. இராசையா செல்லத்துரையும் மனைவி
2. பாலாம்பிகை, வலந்தலை காரைநகர் வடக்கு

எதிராக —வழக்காளிகள்

1. கனகசபை நவரத்தினம (காலஞ்சென்றவர்) அவரது மனைவியும் சட்டப்படி பிரதிநிதியாகிய
2. இராசமலர், கொக்குவில் மேற்கு. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6798-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971ம் வூ வைகாசி மீ 4-ந் திகதி (4-5-71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 9465/-ம், 8-7-64 தொடக்கம் 9-10-67 வரைக்கும் ரூபா 6000/-க்கு நூற்றுக்கு வருஷம் 11 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகையும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு வருஷம் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 569ம் 42 சதமும் இதில் இறுக்கப்பட்ட ரூபா 4000/- தவிர்த்து

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் மேற்கு 'தென்காய் மூலை' நிலப்பரப்பு வரகுச்செய்கை $7\frac{1}{2}$ ($7\frac{1}{2}$ Lms V. C.) கல் வீடு தலைவாசலும், சமையல் அறையும், செய்மயிர் வாண்பயிர்களும் தெற்கெல்லைக் காணியிலுள்ள கிணற்றில் பங்கும், எல்லை கிழக்கு ஒழுங்கையும். மாணிக்கத்தின் பெண் அன்னம்மாவினுடைய தனம், எல்லை வடக்கு சரவணமுத்து இராசையாவினதும் மனைவியினதுமாதனங்கள். எல்லை மேற்கு சுந்தரத்தின் கைம்பெண் செல்லம்மாவினதும் மங்கையற்கரசினதும் ஆதனம், எல்லை தெற்கு சுந்தரத்தின் பெண் செல்லம்மாவினது ஆதனமும். ஒழுங்கையும் இதடங்கலும்.

"நித்தியகல்யாணி"
பலாலி ரோட்,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
30—3—71

அ. சிவானந்தன்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 579 2-4-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இ. M B 11249

சுருவில, V. மாணிக்கம் கைம்பெண் யோகம்மா —வழக்காளி

எதிராக

சுருவில், 1. முருகேசு நல்லதம்பியும் பெண் 2. யோகம் ராவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11249-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1971-ம் ஆ சித்திரை மீ 12-ம் உ (12-4-71) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 2000/-ம், 17—11—69 தொடக்கம் 9—3—70 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 286-85 சதமும்

ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை 'வெள்ளோடை' பர. வில. இலா. 6½ எல்லை கிழக்கு ஐயம்பிள்ளை பெண் செல்லாச்சியின் ஆதனம், வடக்கு தெட்சணாமூர்த்தி பெண் பாக்கியலெட்சுமியின் ஆதனம், மேற்கு கீழே சொல்லப்படும் இரண்டாம் ஆதனம், தெற்கு விநாசித்தம்பி வேலாயுதபிள்ளைக்கும் குழந்தை வடிவேலு பெண் சரஸ்வதிக்கும் பொன்னப்பா சோமசுந்தரத்துக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

(2) மேற்படி இறை 'வெள்ளோடைவயல்' பர. நெல். இலா. 13, 1/2 இதில் மேற்குப் பக்கமாக பர. நெ. இலா. 6½ம் எல்லை கிழக்கு: முதலாம் ஆதனம், வடக்கு: தெட்சணாமூர்த்தி பெண் பாக்கியத்துக்குரிய ஆதனம், மேற்கு: குமாரு சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம், தெற்கு குமாரு சுப்பிரமணியம் பெண் வள்ளியம்மைக்கும், விநாசித்தம்பி வேலாயுதபிள்ளைக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

அ. ஜெகநாதன்
கோமிஷனரும்விலைமதிப்பாளரும்
16, A அம்மன் ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
M. 577 2—4—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்: M B 10886

அச்சுவேலி, பத்தமேனி முத்தர் வேலுப்பிள்ளை — வழக்காளி

எதிராக

அச்சுவேலி, பத்தமேனி காலஞ்சென்ற பேதுரு சவிரியின் ஆதனத்தின் உரிமைத் தத்துவகாரன் சவிரி எபிரகாம —எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் M. B 10886-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு சித்திரை மாதம் 12ம் திகதி (12-4-71 திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1716/-ம், 16-6-69 தொடக்கம் 17-12-69 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 292-57 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோவிற்பற்று பத்தமேனி இறை 'காலனை' பர. நில. இலா. 3ம், 12 . 4 குளியும், செய்பயிர் வான்பயிர்களும் கிணறும், வீடுகளும், எல்லை கிழக்கு இராமநாதர் பொன்னுத்துரைக்கும், சூசை அன்ரனிக்குமுரிய ஆதனம், வடக்கு இராசரெத்தினம் பெண் செல்லம்மாவின் ஆதனம், மேற்கு சந்தியா ஒகஸ்தீனின் ஆதனம். தெற்கு ஒழுங்கையும், சூசை அன்ரனியின் ஆதனமும் இதடங்கலும்.

16, A அம்மன் ரோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்,

அ. ஜெகநாதன்.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
எம் 578 (2-4-71)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M. B. 9862

புத்தூர் மேற்கு, அம்பலவாணர் இராசதுரை —வழக்காளி

எதிராக

புத்தூர் மேற்கு, சின்னத்தம்பி கனகசபை —எதிராளி

யாம்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 9862-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1971-ம் வூ சித்திரை மீ 28-ம் உ (28-4-71) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும், 10-30 மணிக்கு இரண்டாம் காணியும் முறையே அந்தந்தக காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 14 060/-ம் 25-3-68 தொடக்கம் 18-10-68 வரைக்கும் ரூபாய் 9,000/-க்கு 9% வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 493-75 இதில் ரூபாய் 3 300/- வைகாசி மாதம் 1969ல் கொடுபட்டுள்ளது.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று புத்தூர் தெற்கு இறை 'பற்சன்றை மேற்கு' (Patchantai Matku) பர. வில. இலா 6, 1/16 இதற்கு எல்லை கிழக்கு கனகசபை முத்துக்குமாருவுக்கும் சின்னத்தம்பி சங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு சின்னத்தம்பி சங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்; மேற்கு சின்னத்தம்பி கனகசபைக்கும் கந்தையா மகள் வேதநாயகிக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு ஒழுக்கையும் கந்தையா மகள் வேதநாயகிக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டி இறை 'பெரியவயல் அடைப்பனார் வயல்' நெற்பரப்பு 50 இதற்கு எல்லை கிழக்கு கயிலாயர் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் சிவசம்பு சிற்றம்பலத்துக்கும் மளவராயர் கந்தையாவின் உரிமையாளருக்குமுரிய ஆதனம்; மேற்கு கதிரவேலு பெண் நல்லபிள்ளைக்கும் மளவராயர் கந்தையாவின் உரிமையாளருக்குமுரிய ஆதனம. இதில் பிரிவிடப்படாத சரிபாதிப் பங்கு.

20, பெருமாள்கோவில்
வடக்கு ஒழுங்கை.
யாழ்ப்பாணம். 133--71

நா. ஸ்ரீஇரங்கநாதன்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்,
எம் 576 2-4-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

மனவேல் வேதநாயகம், கரையூர், யாழ்ப்பாணம். —வழக்காளி (காலஞ்சென்ற அந்தனி மனவேலின் சொத்துக்கு சட்டப்படி நியமிக்கப்பட்ட பிரதிநிதி, கரையூர்) யாழ்ப்பாணம்.

T. Case No: 2118 டிஸ்திறிக் கோர்ட், யாழ்ப்பாணம்.

வழ. இல: M B, 10401 எதிராக

1 எஸ் சுப்பிரமணியம் அவரது மனைவி

2 மதலெனு, கரையூர், யாழ்ப்பாணம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10401 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1971-ம் வூ சித்திரை மாதம் 27-ம் திகதி (27—4—71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசிதத் ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 4,000/-ம், 26-10-68 தொடககம் 15-7-69 வரைக்கும் ரூபாய் 2,000/-க்கு 12 வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 322-70

ஆதனங்களின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று கரையூர் இறை 'குடியிருப்பு வளவு' குளி 7½ம் புதுக் கட்டிடங்களும், மலசல கூடமும். இணறும், எல்லைகள்: கிழக்கும் வடககும் ரோட், மேற்கு ஒழுங்கை, தெற்கு மரியாம்பிள்ளை இராசையாவின் ஆதனம், அதடங்கலும் அதன் உரிமைகளும்

2 மேற் கூறப்பட்டபடி 'குடியிருப்பு வளவு' இதில் குளி 1½யும் குளி 1, 11/16 யும் சேர்த்து மொத்தக் குளி 3, 9/16 புதுக் கடையும் அதனைச் சேர்ந்தவைகளும் கிழக்கு சவரிமுத்து பேதுருப்பிள்ளைனதும் அவரது மனைவி தங்கக்குட்டியினதும் ஆதனம், வடக்கும் மேற்கும் ரோட், தெற்கு வயித்தி சவரிமுத்துவின் ஆதனம், அதடங்கலும், அதன் உரிமைகளும். அதனைச் சேர்ந்தவைகளும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 15.3.71

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்,
எம். 572 2.4.71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 2—4—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்